**In the Court of the District Munsif, Eraniel**

**Original Suit No. 6/2022** **Date:25.07.2025**

**(PW1)- முருகன்**

**1** ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு**விசாரணை**

**1.** வாசாஆ. 1 ஆவணம் நானும் எனது குடும்பத்தினரும் சம்மதித்து ஏற்படுத்தி கொண்ட குடும்ப ஏற்பாட்டு ஆவணம் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எந்த தவறுமில்லையென்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் டி பட்டிகை சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி டி பட்டிகை சொத்தில் ஒன்றாம் இன சொத்தான புல எண் 112/12 சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி புல எண்ணில் 4 சென்ட் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 4 சென்ட் சொத்திற்கு கிழக்கு பக்கம் சாலை என்றால் சரிதான்.

**2.** புல எண் 112/12 சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் ஞாபகமில்லை. மேற்படி புல எண் 112/12 சொத்தில் மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கும் பங்கு உண்டு என்றால் சரிதான். எனக்கு பாக உடன்படிக்கையில் கிடைத்த புல எண் 112/12 சொத்தை வழக்கு ஏ பட்டிகை சொத்தாக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு ஏ பட்டிகை சொத்திற்கு கிழக்கு பக்கம் சாலையை ஒட்டி 16 ½ லிங்ஸ் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதிக்கு பாக உடன்படிக்கை படி சி பட்டிகை சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

**3.** மேற்படி சி பட்டிகையில் 1 ம் இன சொத்தாக பாக உடன்படிக்கையில் புதிய புல எண் 112/12 ல் காட்டப்பட்டுள்ள சொத்து 1 ம் பிரதிவாதியின் சொத்து என்றால் சரிதான். மேற்படி பாக உடன்படிக்கைப்படி 1 ம் பிரதிவாதிக்கு 1 ம் இன சொத்தில் 4 சென்ட் நிலம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அவருக்கும் கிழக்கு பக்கம் சாலையை ஒட்டி 16 ½ லிங்ஸ் சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனக்கு பாக உடன்படிக்கை படி சி பட்டிகை சொத்து 2 ம் இன சொத்தாக கிடைக்கப்பெற்ற

சொத்தின் மொத்த விஸ்தீரணம் 2.25 செண்ட் என்றால் சரிதான். அதே போல் பிரதிவாதிக்கு சி பட்டிகையில் 2 ம் இன சொத்தில் 2.25 செண்ட் சொத்து கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான்.

**4.** ரி சர்வே எண் 112/12 மற்றும் 112/13 ஒரே கண்டமாக உள்ளது என்றால் சரிதான். வழக்கில் காட்டப்பட்டுள்ள ஏ பட்டிகை சொத்து கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் போது அகலம் விரிந்து செல்கிறது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதியின் சொத்து கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் போது அகலம் குறைந்து செல்கிறது என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தில் முன்புறம் குறுகிய நிலம் என்பதால் சொத்திற்குள் 4 சக்கர வாகனத்தை எடுத்து செல்ல முடியாது என்றாலும் ரோட்டின் ஓரத்தில் அவரின் நிலத்தில் நிறுத்துகிறார் என்றாலும் சரியல்ல.

**5.** 1 ம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் 4 சக்கர வாகனத்தை நிறுத்துகிறார் என்றால் அவ்வாறு நிறுத்தினாலும் எனது சொத்தில் அவரது வீடு அமைந்துள்ளதால் என்னால் எனது சொத்திற்கு சென்று வர முடியவில்லை. பாக உடன்படிக்கை படி 1 ம் பிரதிவாதி அவருக்கு கிடைத்த இடத்தில் வீடு கட்டவில்லையென்றாலும் எனக்கு கிடைத்த இடத்தில் வீடு கட்டியுள்ளார் என்றாலும் சரிதான். எனது பிராதில் என்னுடைய வீட்டிற்கு பின்புறம் 1 ம் பிரதிவாதிக்கு இடம் ஒதுக்கப்பட்டு அதில் அவர் வீடு கட்டியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**6.** 1 ம் பிரதிவாதிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து குறுகிய நிலம் என்பதால் சர்வே எண் 112/13 ல் உள்ள சொத்தை பொறுத்து எனக்கு பங்கு வேண்டாம் என்று கூறி விட்டேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும் மேற்கூறியவாறு உறுதி கூறி விட்டு 1 ம் பிரதிவாதிக்கு தெரியாமல் சர்வே எண் 112/13 ல் உள்ள சொத்தை என் பங்கு சொத்தாக எழுதி விட்டேன் என்றால் சரியல்ல. 1 ம் பிரதிவாதி அவரது சொத்தில் வீடு கட்டி எத்தனை வருடம் என்றால் சுமார் 30 வருடங்கள் இருக்கும், அப்போது நான் சிறுவன். எனக்கு தற்போது என்ன வயது என்றால் 67

வயதாகிறது.

**7.** 1 ம் பிரதிவாதி என் இடத்தில் வீடு கட்டியதை வாழ்விக்க வேண்டி பரிகாரம் கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 1 ம் பிரதிவாதி அவருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, இருவரும் சம்மதித்து தான் வீடு போட்டு வழிபாதையை பயன்படுத்தி வந்தோம், தற்போது வழிப்பாதையை பயன்படுத்த அனுமதிக்க மறுத்து வருகிறார். பாகப்பிரிவினைப்படி சர்வே எண் 112/12 ல் எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை சுற்றி காம்பவுண்ட் சுவர் எழுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் வீடு கட்டி விட்டேனா என்றால் வீடு கட்டவில்லை.

**8.** நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் என்னுடைய சொத்து முழுவதிலும் வீடு கட்டப்பட்டுள்ளதை குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்தில் ஒரு வீடு , ஒரு ஹோட்டல், ஒரு செட் அமைத்துள்ளேன் என்றால் சரிதான், செட் மட்டும் கிடையாது. நீதிமன்ற ஆணையர் தனது வரைப்படத்தில் செட் என்று தவறாக குறிப்பிட்டுள்ளார் என்றால் செட் கிடையாது. நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைப்படத்திற்கு நான் ஆட்சேபணை தெரிவிக்கிவல்லையென்றால் நான் அதை பார்க்கவில்லை.

**9.** வாசாஆ. 1 ஆவணத்தில் வழிப்பாதை பற்றி குறிப்பிடப்படவில்லையென்றால் சரிதான். வாசாஆ. 1 ஆவணத்தில் வரைப்படம் இணைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் வரைப்படம் இல்லாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வரைப்படத்தை தாக்கல்செய்தால் உண்மை வெளிப்பட்டு விடும் என்பதால் அதை மறைத்து வாசாஆ. 1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சி பட்டிகை பாதையாக குறிப்பிட்டுள்ள சொத்து பிரதிவாதிகள் சொத்து என்றால் பொதுப்பாதையாக பயன்படுத்தி கொள்ள எல்லோரும் சம்மதித்து வீடு கட்டி மேற்படி

நிலத்தை பாதையாக உபயோகித்துள்ளோம்.

**10.** மேற்படி சி பட்டிகை சொத்தை பாதையாக பயன்படுத்த செய்து கொண்ட உடன்படிக்கையை எழுத்து பூர்வமாக ஆவணமாக ஏற்படுத்தியுள்ளோமா என்றால் இல்லை, வாய்மொழியாக செய்துள்ள உடன்படிக்கை. எனது வழக்கில் பிரதிவாதியின் சொத்து சி பட்டிகை சொத்து என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. சி பட்டிகை சொத்து பிரதிவாதி சொத்து அல்லாத பட்சத்தில் அவரது சொத்தில் நான் பாதை அவகாசம் கோர தேவையில்லையென்றால் சரியல்ல. பாதைகள் பற்றி ஆவணத்தில் குறிப்பிடாததால் Easement by grant கோர உரிமையில்லையென்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)